# அன்னை மொழியே



# பாவலரேறு
# பெருஞ்சித்திரனார்



# பாவலரேறு பெருஞ்சித்திரனார்

- பெயர்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்
- பிறப்பு: 10.3.1933
- ஊர்: சேலம் மாவட்டம் சமுத்திரம்
- இயற்பெயர்: இராசமாணிக்கம்.
- பெற்றோர்: துரைச்சாமி-குஞ்சம்மாள்
- நூல்கள் : உலகியல் நூறு, பாவியக்கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப் பறவைகள்.

# அழகார்ந்த செந்தமிழே

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

# செப்பரிய நின்பெருமை

செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்

உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச்
செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த
அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி
முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே!

# தமிழ் நூல்கள்

எட்டுத்தொகை நூல்கள்

- நற்றிணை
- குறுந்தொகை
- ஐங்குறுநூறு
- பதிற்றுப்பத்து
- பரிபாடல்
- கலித்தொகை
- அகநானூறு
- புறநானூறு

# பத்துப்பாட்டு

- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- முல்லைப்பாட்டு
- மதுரைக்காஞ்சி
- நெடுநல்வாடை
- குறிஞ்சிப்பாட்டு
- பட்டினப்பாலை
- மலைபடுகடாம்

# பதினெண்கீழ்க்கணக்கு

| | |
|---|---|
| நாலடியார் | திணைமாலைநூற்றைம்பது |
| நான்மணிக்கடிகை | திருக்குறள் |
| இன்னா நாற்பது | திரிகடுகம் |
| இனியவை நாற்பது | ஆசாரக்கோவை |
| களவழி நாற்பது | பழமொழி நானூறு |
| கார் நாற்பது | சிறுபஞ்சமூலம் |
| ஐந்திணை ஐம்பது | முதுமொழிக்காஞ்சி |
| திணைமொழி ஐம்பது | ஏலாதி |
| ஐந்திணை எழுபது | கைந்நிலை |

# ஐம்பெருங்காப்பியங்கள்

- சிலப்பதிகாரம்
- மணிமேகலை
- சீவக சிந்தாமணி
- குண்டலகேசி
- வளையாபதி